1984 பிப்ரவரி 17]

Representation from Villagers of Kattukkanalloor

* 10 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Irrigation be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government, from the villagers of Kattukanalloor, Kannamangalam Firka, Arni taluk, North Arcot district, during the last week of January 1983, for forming (i) a supply channel to Thangal Eri for storage of water in that lake, and (ii) to prevent the wastage of water discharged from Gooneri and to avoid damage to crops; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.

(இ) அதன் மீது உரிய மதிப்பீடு தயாரித்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு தல அதிகாரிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஆளுநர் உரையில்கூட சிறு நீர்ப்பாசனத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. அது வரவேற்கக்கூடிய அம்சம். ஆனால், நான் குறிப்பிட்டிருக்கிற கூனேரியிலிருந்து வருகிற தண்ணீர் தாங்கல் ஏரி சென்று சேருவதற்கு வடிகால் வசதிகள் இல்லை. அதன் காரணமாக மழைநீர் வீணாகிறது. பெருக்கெடுத்தோடும் வெள்ள நீரால் அந்தப் பகுதியில் உள்ள பயிர்கள் நாசமாகின்றன. ஆகவேதான். இந்தக் கால்வாயை அமைக்க வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் மிகவும் வற்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள். கடந்த இரண்டு, மூன்று நாட்களாகப் பெய்த மழையின் காரணமாக அந்தப் பகுதியில் எல்லாம் ஏராளமான நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. ஆகவே, இதைத் துரிதப்படுத்த தக்க நடவடிக்கைகள் விரைவாக எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, இந்த வடிகால் அமைப்புகளைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ 800 அடி நீளம் 60 அடி அகலத்திற்குப் போட வேண்டியிருக்கிறது. இந்தத் திட்டம் போடப்படுவதால் பாதிக்கப்படுவது 15 ஏக்கர் பட்டா நிலமாகும். இருந்தாலும் இந்த 15 ஏக்கர் பட்டா நிலத்தில் கூட விளைச்சல் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, தனியான திட்ட மதிப்பீடு ஒன்று ரூ. 70 ஆயிரம் செலவில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதுமாதிரி உரிய நடவடிக்கை எடுப்பதற்குத்தான் அரசு தக்க ஏற்பாடுகளைச் செய்து தக்க ஆணைகளைப் பிறப்பித்திருக்கிறது.

[1984 பிப்ரவரி 17

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த கேள்வியில் குறிப்பிட்ட மையப் பொருளைப்பற்றி இந்த அறிவிப்பு இல்லாவிட்டாலும், தற்போதுள்ள சூழ்நிலையைப் பற்றிக் கேட்டிருந்தேன். தற்போது தமிழகத்தில் ஒரு வார காலமாக இடைவிடாத மழை பெய்து கொண்டிருப்பதால், எவ்வளவோ வகையான அபாயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதை உணர்ந்து எதிர்காலத்திலாவது, இந்த அபாயங்களைத் தவிர்க்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே வெள்ளப்பாதுகாப்புக்காக என்று தனியாக ஒரு தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆகவே அந்த வகையில் அந்தத் தலைமைப் பொறியாளர் அரசுக்கு உரிய திட்டங்களையும் விளக்கங்களையும் தருவார்கள். அந்த அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எங்கே மழை வரப்போகிறது என்று மக்கள் நினைத்து, பல ஏரிகளில் குடிசைகள் போட்டவர்கள், இப்போது பெய்து கொண்டிருக்கிற மழையால் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த மழையை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு, இனிமேலாவது ஏரிகளில் குடிசைகள் போடாமலிருப்பதற்காக அரசாங்கமே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏதாவது செய்ய உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, இது தனிக் கேள்வி போடவேண்டிய ஒரு கருத்தாகும். இருந்தாலும்கூட, இந்தக் கேள்வியைப் பயன்படுத்திக்கொண்டு இங்கே ஒரு கருத்தைத் தெரிவிக்க முன் வருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது நூற்றுக்கு நூறு உண்மை. ஏரிகளின் கரைகளில் குடிசைகள் போடுவதால் ஏரிகளின் கரைகள் பலமிழந்து போகின்றன. ஆகவே அப்படிப்பட்ட குடிசைகளை அப்புறப் படுத்தி, மேட்டுப் பகுதிகளுக்கு அவர்களைக் கொண்டு செல்ல அரசு எண்ணு

1984 பிப்ரவரி 17]

கிறது. ஆனால், அனைத்து இயக்கங்களின் சார்பிலும், இதற்கு அரசாங்கத் தோடு ஒத்துழைத்தால் இதன் பலன் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

பெரு மழையிலும் மேலவையை நடத்திக்கொண்டிருப்பதுபற்றி.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். அடாது மழை பெய்தாலும், விடாது மேலவையை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். வீட்டிலிருந்து மழையில் வருவதற்கு மிகுந்த கஷ்டமாக உள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கிளாரிபிகேஷன் என்றால் அதை முன் கூட்டியே தலைவரிடம் தெரிவிக்கவேண்டும். அடுத்து, கவன ஈர்ப்புத் தீர்மானம்.

3. கவன ஈர்ப்பு.

அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு தாராள ஓய்வூதியத் திட்டத்தின் பயனை அளிப்பது குறித்து.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"உச்ச நீதி மன்றமும் இந்திய அரசும் ஆணைகள் பிறப்பித்திருந்தும் கூட, அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு அவர்கள் எந்தத் தேதி யிலிருந்து ஓய்வு பெற்றிருந்தாலும் தாராள ஓய்வூதியத் திட்டத்தின் பயனை ஓய்வூதியம் பெறுபவர் அனைவருக்கும் கொடுக்க அரசு தவறியது குறித்து".

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது குறித்து, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 325 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.